**இந்தியத் தூதரகம்,**
**கோலாலம்பூர்,மலேசியா**

# <u>செய்தி அறிக்கை</u>

## <u>66 சிறந்த மலேசிய இந்திய மாணவர்களுக்கு இந்தியக் கல்வி உதவித்தொகை மற்றும் அறக்கட்டளை நிதி உதவி</u>

(Indian Scholarship and Trust Fund -ISTF)

கோலாலம்பூரிலுள்ள இந்தியத் தூதரகம், மலேசியாவிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் பயிலும் 66 மலேசிய இந்திய வம்சாவளி மாணவர்களுக்கு, இந்தியக் கல்வி உதவித்தொகை மற்றும் அறக்கட்டளை நிதியின் கீழ் ஏறக்குறைய ரிம300,000 (ரூபாய் 45 லட்சம்) கல்வி உதவித்தொகையை வழங்கப்படுவதாக அறிவித்துள்ளது. இத்தொகை கடந்த ஆண்டை காட்டிலும் கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளது என இந்தியத் தூதரகம் தமது அறிக்கையில் அறிவித்துள்ளது.

அனைத்து விண்ணப்பங்களின் மீளாய்விற்கு பிறகு, டான்ஸ்ரீ பேராசிரியர் டாக்டர் டி.மாரிமுத்து தலைமையில், மலேசியாவில் பல்வேறு துறைகளில் சிறந்த பிரமுகர்கள் உள்ளடக்கிய தேர்வு குழு உறுப்பினர்கள், பொருளாதார அடிப்படையில் தகுதி பெற்ற சிறந்த மாணவர்களுக்கு இந்த கல்வி உதவித்தொகையை வழங்க முடிவு செய்தனர். டான்ஸ்ரீ டத்தோ அஜித் சிங், டான்ஸ்ரீ டத்தோ டாக்டர் எம். தம்பிராஜா, திரு. சதீஷ் ராமச்சந்திரன் மற்றும் டத்தோ டாக்டர் அட்சைய குமார் ராவ் ஆகிய நால்வரும் தேர்வு குழு உறுப்பினர்கள் ஆவார்கள்.

ஒவ்வொரு ஆண்டும், மலேசிய இந்திய வம்சாவளி மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த இந்தியக் கல்வி உதவித்தொகை மற்றும் அறக்கட்டளை நிதி உதவி 1946-ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் பிரதமர் ஜவர்ஹர்லால் நேரு அவர்களால் நிருவப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பல ஆண்டுகளாக முன்னாள் இந்தியப் பிரதமர்களின் பங்களிப்பால் கூடுதல் மானியமாக வழங்கப்பட்ட இந்தக் கல்வி உதவித்தொகை; கடந்த வருடம் நவம்பர் 2015-இல் மலேசியாவிற்கு வருகை புரிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ரூபாய் 5 கோடி (ரிம 3 மில்லியன்) கூடுதல் மானியம் அளிப்பதாக அறிவித்திருந்தார். இந்த அறக்கட்டளை 71 வருடங்களாக செயற்பட்டு ஒவ்வொரு வருடமும் இந்த கல்வி உதவித்தொகையை வசங்கி வருகின்றது.



இடமிருந்து வலம் : இந்தியத் தூதரக கல்வி பிரிவு அதிகாரி குசும் லதா, டத்தோ டாக்டர் அட்சைய குமார் ராவ், இந்தியத் தூதர் திருமூர்த்தி, டான்ஸ்ரீ பேராசிரியர் டாக்டர் டி.மாரிமுத்து, திரு. சதீஷ் ராமச்சந்திரன், இந்தியத் தூதரக பணியாளர் திரு.மெய்யப்பன்



நேர்காணலின் போது